# செயல்அணுகுமுறைக்கான முன்னுரிமைகள்தமிழ்

அடுத்துவரும் ஐந்தாண்டுகளில், TCHC ஐந்து முன்னுரிமைகளில் கவனம் செலுத்தும்:

பாதுகாப்பான, ஆரோக்கியமான, உள்ளடக்கும் தன்மையதான குடியிருப்பாளர் சமூகங்களை ஆதரித்தல்.

எமது கட்டடங்களின் துப்புரவு, பராமரிப்பு, சென்றடையுந்தன்மை என்பவற்றை மேம்படுத்தல்.

ரொறன்ரோவாசிகளுக்கு நெருக்கடிநிலை உள்ள குடியிருப்புவசதிக்கான குடியிருப்புகளை வழங்குவதற்கு **TCHC** யினது கட்டுபடியாகக்கூடிய வீடமைப்பு முறைமையை வலுப்படுத்தல்.

ஒன்றிணைந்து செயல்படும், பரந்துபட்ட, வளமான வேலையிடமொன்றினை வளர்த்தெடுத்தல்.

**TCHC**யினது தலைமைத்துவ, கற்றல், புத்தாக்கத் திறனை மேம்படுத்தல்.

# பாதுகாப்பான, ஆரோக்கியமான, உள்ளடக்கலைக் கொண்ட குடியிருப்பாளர் சமூகங்களை ஆதரித்தல்.



**பாதுகாப்பினை மேம்படுத்தவென சமூகத்துடன் சேர்ந்து செயற்படுதல்.**

குடியிருப்பாளர்கள், காவல்துறையினர், உள்ளூர் பாதுகாப்பு நிறுவனங்கள், பங்காளிகளுடன் செயல்பட்டு ஒரு சமூக -அடிப்படையிலான பாதுகாப்பு அணுகுமுறையை நாம் வென்றெடுப்போம். பாதுகாப்புசார் முன்னெடுப்புகளைத் திட்டமிடல், வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தலில் குடியிருப்பாளர்களை நாம் ஈடுபடுத்துவோம்.

**எமது குடியிருப்பாளர்களுக்கான சமூக ஆதரவினை வழங்கவென எமது பங்காளித்துவங்களைப் பலப்படுத்துதல்.**

வதிவிடங்களில் எமது குடியிருப்பாளர்கள் வெற்றியீட்டவும் தொடர்ந்து முன்னேறவும் தேவைப்படும் ஆதரவுகள், சேவைகளை நாம் இனங்காணுவோம். இந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக நாம் பங்காளிகளுடன் செயல்படுவோம்.

**சமூக முன்னெடுப்புகளை முன்னின்று நடத்தவும் வடிவமைக்கவுமென குடியிருப்பாளர்களுக்கு மேலதிக அதிகாரமளித்தல்.**

குடியிருப்பாளர்களுக்கான சமூக, பொருளாதார வாய்ப்புகளை நாம் தொடர்ந்து விரிவுபடுத்துவோம். குடியிருப்பாளர் தலைமைத்துவத்தில் மேலும் முதலீடு செய்வதுடன் உள்ளூர் நிகழ்ச்சிகளை, சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளை வடிவமைப்பதில் குடியிருப்பாளர்களுக்கு ஆதரவளிப்போம்.

# பாதுகாப்பான, ஆரோக்கியமான, உள்ளடக்கலைக் கொண்ட குடியிருப்பாளர் சமூகங்களை ஆதரித்தல்.



குடியிருப்பாளர்களது தேவைகளை மேலும் சிறப்பாக விளங்கிக்கொள்வதற்காக அவற்றைச் செவிமடுப்பதுடன், ஒரு ‘கறுப்பினத்தவருக்கெதிரான துவேசத்தினை எதிர்கொள்ள நாம் பிரயோகிக்கும்நுண்பார்வை’ உட்பட, நாம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், சேவைகளை அவற்றிற்கேற்றவாறு அமைத்தல்.

எமது குடியிருப்பாளர்களுடைய வெவ்வேறான தேவைகள், பார்வைகளுக்கேற்றவாறு பதிலிறுப்பினை நாம் வழங்கக்கூடியவர்களாயிருத்தல் வேண்டும். நாம் செவிமடுத்து, தரவுகளையும், கருத்துமீளூட்டல்களையும் சேகரித்து அவற்றிற்கான நடவடிக்கையை எடுப்போம். நாம் மேலும் தொடர்ந்தும் எமது சமூகத்திலுள்ள கறுப்பினத்தவருக்-கெதிரான இனவாதம் பற்றிய வெளிப்படையான உரையாடல்களை உருவாக்குவோம். அத்துடன் கறுப்பினத்தவருக்-கெதிரான துவேசத்தினை எதிர்கொள்ளும் வகையில் செயல்அணுகுமுறையின் வழங்கலைச்செய்ய எமது குடியிருப்பாளர்கள், பங்காளிகளுடன் செயல்படுவோம்.



# பலாபலன்கள்

## குறுகியகாலத்தவை

- சமூக முன்னெடுப்புகளுக்குத் தலைமை தாங்குவதிலும் அவற்றை வடிவமைப்பதிலும் மேலும் அதிகமான குடியிருப்பாளர்கள் தமது வலுவான குரலைக் கொண்டிருக்கக்கூடியதாயிருக்கும்.
- மேலும் அதிகமான குடியிருப்பாளர்கள் ஏற்கனவே உள்ள நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பர். அத்துடன் நிகழ்ச்சித் திட்டங்கள், முன்னெடுப்புகளில் பங்கெடுக்கும் வாய்ப்புகளும் மேலும் அதிகமாகும்.
- எமது குடியிருப்பாளர் சமூகங்களினது தனித்துவமான தேவைகளுக்கு நாம் முன்னேற்பாடுள்ள பதிலிறுப்பினை வழங்குவோம்.

## நீண்ட காலத்தவை

- குடியிருப்பாளர்கள் மேலதிக பாதுகாப்பினை உணரும்வகையில், குறைந்தளவிலான நெருக்கடிநிலை பாதுகாப்புசார் சம்பவங்கள் இடம்பெறும்.
- தமது சமூகங்களினது தேவைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், மேலும் அதிகமான நிகழ்ச்சித்திட்டங்களும் சேவைகளும் குடியிருப்பாளர்களுக்குக் கிடைக்கும்.
- பாதுகாப்பு ஆபத்துகளைக் குறைக்கும் வகையில், கட்டடங்கள் மேலும் துப்புரவாகவும், ஒளியூட்டப்பட்டதாகவும், சிறப்பாகப் பராமரிக்கப்பட்டனவாகவும் காணப்படும்.
- கறுப்பினத்தவருக்கெதிரான துவேசத்திற்குத் தீர்வுகாணல் விடயத்திற்கு உதவும்செயல்நடவடிக்கைகள்மூலம் குடியிருப்பாளர்களது அனுபவத்தை நாம் மேம்படுத்துவோம்.
- குடியிருப்பாளர்களினது ஒட்டுமொத்தமான திருப்தியையும், நலனையும் நாம் மேம்படுத்துவோம்.
- எமது அன்றாட வேலைகளைத் தெரிவிக்கவென குடியிருப்பாளர்களது கருத்து மீளூட்டல்களைத் தொடர்ந்த அடிப்படையில் சேகரிப்பதற்கான ஒரு வழியை நாம் உருவாக்குவோம்.

# எமது கட்டடங்களின் துப்புரவு, பராமரிப்பு, எளிதாகச்சென்றடையக்கூடிய தன்மை என்பவற்றை மேம்படுத்துதல்.

**எமது கட்டடங்களின் நிலைமையை மேம்படுத்தல்.**

தரம், பராமரிப்பு, துப்புரவு என்பன எமது குடியிருப்பாளர்கள் முக்கியமாகக் கருத்தில் கொள்ளும் விடயங்களில் சிலவாகும். நாம் தொடர்ச்சியான மாறாநிலைப்பாடுடைய, தரத்தை அளவிடக்கூடிய ஒரு சேவை வழங்கலைநடைமுறையில் கொண்டுவருவோம். எமது கட்டடங்களைப் பராமரிப்பதற்கு உதவக்கூடிய நிதி உதவியைப்பெற நாம் செயற்படுவோம். சாத்தியமான அதியுயர்தர சேவையினைப் பெறுவதை உறுதிப்படுத்தவென, எமது சேவை வழங்கும் ஒப்பந்தக்காரருக்குக் கூடுதலான மேற்பார்வையினை நாம் வழங்குவோம்.

**உடனடியான செயல்பாடு, தெளிவான தொடர்பாடல், மரியாதையுடைய உறவாடல்கள் வழியாகக் குடியிருப்பாளர்களுடனான எமது பதிலிறுக்கும் தன்மையை அதிகப்படுத்தல்.**

நேர்மறையான குடியிருப்பாளர் அனுபவத்திற்கு நாம் முன்னுரிமை அளிப்போம். எமது அலுவலர்களிடமிருந்து தொடர்பாடல், மரியாதை, இரக்கமான புரிந்துணர்வுகொண்ட ஒரு கலாசாரத்தை நோக்கி நாம் செயல்படுவோம் என்பது இதன் கருத்தாகும். குடியிருப்பாளர்கள், முக்கியமாக மாறுபட்ட திறன்கள், அல்லது தேவைகள் கொண்டவர்களுடன் நாம் எவ்வாறு தொடர்பாடுகின்றோம் என்பதை மேம்படுத்துவோம். எமது பன்முகப்பட்ட குடியிருப்பாளர் சனத்தொகையின் தனித்துவமான தேவைகள், அனுபவங்களுக்கு மேலும் அதிகபட்சமான பதிலிறுக்கும் தன்மைகொண்டிருக்கும்வகையில் அலுவலர்களுக்கான பயிற்சி அளிப்போம்.



# எமது கட்டடங்களின் துப்புரவு, பராமரிப்பு, எளிதாகச்சென்றடையக்கூடிய தன்மை என்பவற்றை மேம்படுத்துதல்.

எமது கட்டட நிலப்பகுதிகளை மேலும் வரவேற்குந்தன்மை, சென்றடையுந்தன்மை கொண்டனவாக ஆக்குதல்.

எல்லோரும் வரவேற்கப்படுவதாக உணரும் வகையிலும் முழுமையாகப் பங்குகொள்ளும் வகையிலும் அமையும் சமூகங்களைக் கட்டியெழுப்புதலில் நாம் கடப்பாடு கொண்டுள்ளோம். சென்றடையும் தன்மையை மேம்படுத்தும் திருத்தவேலைகள், மேனிலைப்படுத்தல்களுக்கு நாம் முன்னுரிமை அளிப்போம். மாறுபட்ட திறன்கள் கொண்ட குடியிருப்பாளர்களுக்கு தயாரானவகையில் இல்லங்கள் அமைவதையும் நாம் மேம்படுத்துவோம். அவரவரது தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் நபர்களுடன் இல்லஅலகுகளை விரைவாகப் பொருத்துவதில் நாம் செயல்படுவோம். பகிர்ந்துகொள்ளப்படும்இடப்பரப்புகள், வசதிகளை எல்லோரும் சென்றடையக்கூடியதாகவும் பயன்அனுபவத்தினைப் பெறத்தக்கவகையிலும் அமைவதை உறுதிப்படுத்த நாம் மேலும் அதிகமாகச் செயல்படுவோம்.





# பலாபலன்கள்

## குறுகிய காலத்தவை

- கட்டடப் பராமரிப்பு, துப்புரவாக்குதல், சமூக ஆதரவுகளுக்கென தெளிவான தரநிலைகளை நாம் விருத்திசெய்வோம்.
- எமது குடியிருப்பாளர்கள் எதிர்பார்க்கும் தரத்தின் அளவில் சரியானநேர ஒழுங்கில் சேவைக்கட்டளைகளை சேவை ஒப்பந்தகாரர்கள் பூர்த்திசெய்வர்.
- தமது கட்டடங்களிலும் சமூக இடப்பகுதிகளிலும் குடியிருப்பாளர்கள் முன்னேற்றங்களை அவதானிப்பார்கள்.

## நீண்ட காலத்தவை

- TCHC கட்டடங்களில் சமூக வசதிகளும் பகிரப்படும் இடப்பகுதிகளும் குடியிருப்பாளர்கள் மேலும் இலகுவாகச் சென்றடையக்கூடியதாகவும் பயன்அனுபவம் பெறக்கூடியதாகவும் அமையும்.
- பராமரிப்பு, திருத்தவேலைகள் சார் விடயங்கள்பற்றி நாம் மேலும் சிறப்பான தொடர்பாடலைக் குடியிருப்பாளர்களுடன் கொண்டிருப்போம்.

சேவை ஒப்பந்தகாரர் அதிகளவில் பதிலிறுப்புச் செய்பவர்களாக இருப்பார்கள்.

- தொடர்பாடல், வாடிக்கையாளர் சேவை, தமது கட்டடங்களின் நிலைமைபற்றிக் குடியிருப்பாளர்கள் மேலும் திருப்தி கொள்வார்கள்.
- பராமரிப்பு, முன்னேற்ற சேவைகள் மேலும் நேரஒழுங்குடனும் திருத்தமானதாகவும் நம்பகத்தன்மையுடையதாகவும் இருக்கும்.
- கட்டட நிலைமைகளை முன்னேற்றும் திருத்தவேலைகள், திருத்தியமைத்தல்களில் நாம் கவனம் செலுத்துவதுடன், நல்ல திருத்தவேலை நிலையைப் பேணவும் உதவுவோம்.

# ரொறன்ரோவாசிகளுக்கு நெருக்கடிநிலை குடியிருப்புவசதிகளை வழங்கும்வகையில் TCHC யின் கட்டுபடியாகக்கூடிய வீடமைப்பு முறைமையினை பலப்படுத்துதல்.

எமது குடியிருப்பாளர்கள் தொடர்ந்து வளமாக வாழக்கூடியதாக, மேலும் அதிக கலப்பு-வருமானமுள்ள சமூகங்களை உருவாக்குதல்

பலமானதும் பன்முகப்பட்ட அயல்களையும் கட்டியெழுப்புவதற்கு, கலப்பு- வருமானமுள்ள சமூகங்கள் ஒரு வாய்ப்பாகும். வருமானத்திற்கேற்ற வாடகை - rent-geared-to-income (RGI) என்ற வகையிலுள்ள இல்லஅலகுகளை எமது புதிய அபிவிருத்தி, மீள்அபிவிருத்திச் செயற்திட்டங்களில் வழங்குவதில் கவனம் செலுத்துவதனை நாம் தொடர்வோம். காலப்போக்கில் இந்த rent-geared-to-income (RGI) அலகுகளைப் புதிய கட்டுபடியாகும் மற்றும் சந்தைவிலைத் தெரிவுகளுடன் சமநிலைப்படுத்துவதற்கான மேம்படுத்தலையும் நாம் கவனிப்போம்.

பொருளாதாரரீதியில் மேலும் நின்றுபிடிக்குந் தன்மைகொண்ட இருப்பிடவசதி முறைமையை இது உருவாக்கும்.

மேலும் அதிக எண்ணிக்கையிலான வாடகை அலகுகளைச் சேர்ப்பதற்கும்தற்போதுள்ள வீடமைப்புவசதி முறைமையில் நல்ல திருத்தவேலை நிலைமையினை முன்னேற்றவும் அவசியமானமுதலீடுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுதல்.

நகரசபையுடன் பங்காளித்துவம் கொண்டு, பழையகட்டடங்களை மீள் உருவாக்கம்செய்யவும் கட்டுபடியாகக்கூடிய இல்ல அலகுகளை உருவாக்கம் செய்யவும் புதிய இடங்களை நாம் தேடுவோம்.

இதனைச் சாத்தியமாக்குவதற்காக மேலும் அதிக அளவிலான பங்காளித்துவங்களையும் நிதியுதவித் தீர்வுகளையும் நாம் உருவாக்கப்பார்ப்போம்.



# ரொறன்ரோவாசிகளுக்கு நெருக்கடிநிலை குடியிருப்புவசதிகளை வழங்கும்வகையில் TCHC யின் கட்டுபடியாகக்கூடிய வீடமைப்பு முறைமையினை பலப்படுத்துதல்.

மேலும் அதிக அளவிலான, நியாயமான- செலவு வகை குடியிருப்பு வசதிகளை வழங்குவதைத் துரிதமாக்க ஏனையவர்களுடன் இணைந்து செயல்படுதல்

கட்டியெழுப்புதலைத் துரிதப்படுத்த, நாம்நகரசபை, பொதுசன நிறுவனங்கள், தனியார், சமூக குழுக்களுடன் சேர்ந்து செயற்படுவோம்.
குடியிருப்பாளர்களுக்கு மேலும் அதிகமான நியாயமான-விலைச் சேவைகளை வழங்கவும்இந்த ஒன்றிணைந்து செயற்படுதல் எமக்கு உதவும்.
நகரசபையின் விரிவான குடியிருப்புவசதி செயல்அணுகுமுறையுடன் முழுமையாக ஒத்தமைந்துள்ள அபிவிருத்தி முன்னுரிமைகளில் நாம் கவனம் செலுத்துவோம்.

எமது குடியிருப்புவசதி முறைமை சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் தாக்கத்தினைக் குறைத்தல்.

கட்டடங்களில் சுற்றுச்சூழல்சார் மேனிலையாக்கங்களைச் செய்வதற்கு புதிய நிதியுதவிகளை நாம் உறுதிசெய்து கொள்வோம்.
நின்றுபிடிக்கும் தன்மையும் பாதுகாத்துப் பேணலும் கொண்ட முன்னெடுப்புகளில் குடியிருப்பாளர்களையும் ஈடுபடுத்துவோம்.

தேவைப்படும் நிதியுதவியுடன் நகரசபையின் பூச்சிய அளவினை எட்டும் சூழல்சார் இலக்குகளின் முன்னேற்றத்திற்கு நாம் ஆதரவளிப்போம்.





# பலாபலன்கள்

## குறுகியகாலத்தவை

- நகரசபையின் குடியிருப்புவசதி முன்னுரிமைகளுடன் ஒத்திணைந்துள்ள புதிய அபிவிருத்திச் செயற்திட்டங்களை நாம் கண்டறிந்து முன்னெடுப்போம்.

## நீண்டகாலத்தவை

- TCHCயினது முறைமையினை செயல்அணுகுமுறைசார்ந்து விரிவுபடுத்துவதும் மீள்சமநிலைப்படுத்துவதுமான ஆயத்த நிலையிலுள்ள அபிவிருத்திச் செயல்திட்டங்களை நாம் முன்னுரிமைப்படுத்துவோம்.
- நகரசபையுடன் ஒன்றிணைந்து செயல்பட்டு, ஒரு தொடரில் உள்ள புதிய வருங்கால செயற்திட்டங்களையும் கண்டறிவதுடன் நாம் புதிய அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கான நிதியுதவிக் கடப்பாடுகளைப் பெறுவோம்.
- சமூக குடியிருப்புவசதிகளிலிருந்து வெளியேறி மாறிக்கொள்ள விரும்பும் குடியிருப்பாளர்களுக்கு, மேலும் அதிகமான வீட்டுவசதித் தெரிவுகளை நாம் வழங்குவோம்.
- திறன்மிக்க கட்டடங்களை இயக்குவதன் மூலம் சுற்றுச்சூழல்சார் தடங்களை நாம் குறைப்போம்.
- மேலும் அதிகமான கலப்பு வருமானம்கொண்ட சமூகங்களை நாம் குடியிருப்புவசதிமுறைமையில் நிறுவுவோம்.

# ஒன்றிணைந்து செயல்படும்தன்மையுள்ள பன்முகப்பட்ட, வளமாக வளரக்கூடிய பணியிடத்தைப் பேணிக்காத்தல்.

**அலுவலர்களது ஆரோக்கியம், பாதுகாப்பு, நலத்தினை முன்னுரிமைப்படுத்தல்**

மனஅழுத்தத்தைக் கையாளுதல், மனநலம் உட்பட எமது அலுவலர்கள் முகங்கொடுக்கும் குறிப்பான சவால்களுக்குத் தீர்வுகாண்பதை நாம் தொடர்வோம். வேலையில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் அலுவலர்களுக்கு நாம் மேலும் அதிகமான ஆதரவுகள் கிடைக்கப்பெறச்செய்வோம். எல்லா அலுவலர்களுக்கும் மேலும் பாதுகாப்பானதும் ஆதரவானதுமான வேலைச்சூழலை உருவாக்குவோம்.

**எல்லோரும் பெறுமதியுடையவர்களாக, ஏற்றுக்கொள்ளப்படுபவர்களாக, உரிமைகொண்டவர்களாக உணரும் ஒரு ஒன்றிணைந்து செயல்படும் கலாசாரமொன்றினை ஊக்கப்படுத்துதல்**

அலுவலர்கள் பயிற்சி, ஆதரவுகளுக்கான முதலீட்டினை நாம் தொடர்வோம். இது வாடிக்கையாளர் சேவை, கலாசார உணர்திறனுடைமை, கறுப்பினத்தவருக்கெதிரான இனத்துவேசம், பேரதிர்ச்சியை அறிவுறுத்திய பராமரிப்பு போன்றவற்றில் கவனஞ்செலுத்தும் வாய்ப்புகளை உள்ளடக்கும்.



# ஒன்றிணைந்து செயல்படும்தன்மையுள்ள பன்முகப்பட்ட, வளமாக வளரக்கூடிய பணியிடத்தைப் பேணிக்காத்தல்.

அலுவலர்கள் தமது தொழில்துறை இலக்குகளை அடைவதற்கும் மிக உன்னதமான சேவைகளை வழங்குவதற்கும் உதவும் அறிவு, திறன்களை அவர்களுக்கு அளித்தல்.

எமது அலுவலர்கள் அவரவர்கள் வகிக்கும் பதவிகளில் வளர்ச்சிபெறுவதற்கும் புத்தாக்கம் செய்வதற்கும், விருத்தியடைவதற்குமான ஆதரவினை உணருவதை நாம் உறுதிப்படுத்துவோம்.

எமது குடியிருப்பாளர்களுக்கு மேம்பட்ட சேவைகளை வழங்கும் திறன்கள் மிக்க, பொறுப்புணர்வுள்ள, கடப்பாடுமிக்க, பன்முகப்பட்ட, பணியாளர் தொகுதியினை நாம் வேலைக்கமர்த்தல், வேலையில் தக்கவைத்தல், அதிகாரமளித்தல் என்பனவற்றைத் தொடர்தல்.

எமது வேலைக்கமர்த்தல் தெரிவுகளில் பேரார்வம், தேவைப்படும் திறன்கள், திறமைகள், வாழ்ந்த அனுபவங்கள் போன்றவற்றில் நாம் கவனம் செலுத்துவோம். அலுவலர்களை அவர்களது வெற்றிக்காக அங்கீகரிப்போம். எமது குடியிருப்பாளர்களுக்கான சேவையில் மேலும் உயர் தரங்களை நிறுவி அதனை நாம் எய்துவோம்.






# பலாபலன்கள்

## குறுகிய காலத்தவை

- திறன்களை விருத்திசெய்ய, குடியிருப்பாளர்களுடன் பயன்மிக்க வகையில் செயல்படுதல், நியாயபூர்வம், பன்முகத்தன்மை, உள்ளடக்கல் என்பவற்றைக் கொண்ட அலுவலர்களுக்கு ஆதரவளிக்கும் பயிற்சிகள் அவர்களுக்கு மேலும் அதிக அளவில் கிடைக்கப்பெறும்.
- நிறுவனத்துடைய இலட்சியம், தொலைநோக்கு, விழுமியங்களுடன் அலுவலர்கள் பெரிதும் தொடர்புபட்டிருப்பதனை உணர்வார்கள்.
- மனநலம், ஏனைய ஆதரவுகள் மேலும் கிடைக்கப்பெறுவதுடன் அலுவலர்களுடைய பாதுகாப்பு, நலம் என்பவற்றினை நாம் மேம்படுத்துவோம்.
- உயர்தர செயல்பாடு, உயர்நிலையில் செயற்படும் அலுவலர்கள் கொண்டாடப்படும் ஒரு ஈடுபாடுள்ள அலுவலர்தொகுதியை நாம் கொண்டிருப்போம்.
- அலுவலர்க்கிடையேயும் குடியிருப்பாளர்களுடனும் மேலும் சிறந்த தொடர்பாடலை நாம் கொண்டிருப்போம்.

## நீண்ட காலத்தவை

- ரொறன்ரோ நகரசபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பன்முகப்பட்ட, ஆரோக்கியமான, நிலையான அலுவலர்குழுவை TCHC கொண்டிருக்கும
- பணியாளர் திருப்தியையும் ஈடுபாட்டினையும் நாம் மேம்படுத்துவோம்.
- தடுக்கப்படக்கூடிய பணியிட பாதுகாப்புச்சார் சம்பவங்களை நாம் குறைப்போம்.
- வருங்காலப் பணியாளர்களதும், சுயாதீன 3ம் தரப்பினரினதும் விருப்பத்தெரிவுக்குரிய வேலைவழங்குநராக TCHC பார்க்கப்படும்.

# TCHCயினது தலைமைத்துவ, கற்றல், புத்தாக்கத் திறனை மேம்படுத்தல்.

**குடியிருப்புவசதி, சமூகத்தைக் கட்டியெழுப்பல் என்பவற்றில் எமது தோற்றவடிவத்தைத் தலைமைவகிக்குமளவிற்கு உயர்த்தல்**

எமது தலைமைத்துவத்தை விரிவாக்குவதிலும்  வீட்டுவசதிஎடுத்துரைப்பிலும் சமூக குடியிருப்புவசதி வழங்குதலிலும் எமக்குள்ள உயர்திறமையைப்பிரயோகிப்போம். இந்தவகையில், எமது பணியையும், எமது குடியிருப்பாளர்களையும் பாதிக்கும் கொள்கை, நிதிஉதவித் தீர்மானங்களில் நாம் செல்வாக்குச் செலுத்தி உதவமுடியும்.

**தொடர்ச்சியான முன்னேற்றம், புத்தாக்கம் என்பவற்றில் நாம் தொடர்ந்து முதலிடுதல்.**

அளவிடக்கூடியதும் சாட்சிசார் முடிவெடுப்பதற்கும் ஆதரவளிக்க எமது தரவுகளையும் பகுப்பாய்வுகளையும் உபயோகிப்பதனை விரிவுபடுத்துவோம்.
நாம் செயல்படுவதற்கான புதிய வழிகளைக் கண்டறிந்து, முயற்சிப்பதற்கு எமது அலுவலர்களதும், குடியிருப்பாளர்களதும் ஆலோசனைகள், அனுபவங்களிலிருந்தும் நாம் விடயங்களை எடுப்போம்.

**எமது சேவைகள் வழங்கல், பயன்பெறுநர் அனுபவம், திறனை மேம்படுத்தும் பொருட்டு தொழில்நுட்பத்தினை நாம் மேலும் திறமையாகப் பயன்படுத்தல்.**

எமது சேவைகளை மேலும் பயன்மிக்கதாகவும்திறன்மிக்கதாகவும் கையாள உதவ, எமது எண்முறைத்தொகுதிகளை மேம்படுத்தச் செயற்படுவோம்.
பராமரிப்புடனான திருத்தவேலைகள், வெற்றிடங்கள், முறைப்பாடுகளைக் கையாள ஒரு மேலும் திறமையான தொகுதிமுறையை உருவாக்குதலைஇது குறிக்கும்.
குடியிருப்பாளர்களுக்கு இணையவழியான மூலவளங்களை நாம் மேம்படுத்துவோம். இது சேவைகளைப் பெறுவதையும் வேண்டுதல்களின் நிலைப்பாடுகளை அறிவதையும், சேவை ஒப்பந்தகாரருடனான தமது அனுபவம் பற்றிய கருத்துமீளூட்டலைத் தருவதையும் இலகுவாக்கும்.





# பலாபலன்கள்

## குறுகியகாலத்தவை

- விடயப்பொருள் திறனிலும் சிந்தனைகொண்ட தலைமைத்துவத்திலும் TCHC ஒரு உயர்தர முறைமையைக் கொண்டிருக்கும்.
- நாம் தகவல் பாதுகாப்பு, தகவல் கையாண்மை என்பவற்றினை மேம்படுத்துவோம்.
- தரவுகளின் தரம், பாதுகாப்பு, கையாண்மைக்கு முக்கியத்துவமளிக்கும் ஒரு நிறுவன தகவல் செயல்அணுகுமுறையினை நாம் உருவாக்குவோம்.
- நிறுவனத்தில் புத்தாக்கத்தினை ஆதரிப்பதற்குச் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துதல் உட்பட, சேவை வழங்கலில் புதிய மேம்படுத்தல்களை முயற்சிக்கப் புதிய வழிமுறைகள் கிடைக்கப்பெறும்.

## நீண்டகாலத்தவை

- இந்தத் துறையின் எதிர்காலத்தில் செல்வாக்குச் செலுத்தவென, ஏனைய வழங்குநர்களை ஒன்றாகத் திரட்டும் குடியிருப்புவசதியில் TCHC ஒரு தலைமைத்துவ நிறுவனமாக அங்கீகரிக்கப்படும்.
- போக்குகளை எதிர்வுகூறுவதற்கும் முன்னேற்றத்திற்குமான வாய்ப்புகளைக் கண்டறிவதற்கு வியாபார நுண்ணறிவு, பகுப்பாய்வுகள் என்பவற்றைப் பயன்படுத்துவோம்.
- தொடர்ந்த முன்னேற்றங்களைத் தரவுகள் நேரடியாகத் தெரிவிக்கும்.
- புதிய விடயங்களை முயற்சிக்கச் விருப்புடையதான, புத்தாக்கங்களை உருவாக்க உதவும் திறந்த மனதுடைய சிந்தனைநிறை கலாசாரத்தினை (TCHC) கொண்டிருக்கும்.

2025-2029 STRATEGIC PLAN

Toronto Community Housing



# உங்களுக்கு நன்றி!

ரொறன்ரோ சமூக குடியிருப்புவசதிக் கூட்டுத்தாபனம் (TCHC) 2025-2029 செயலாக்க அணுகுமுறைத் திட்டம்